# அமிர்தா விஸ்வ வித்யா பீடம் நாகை மீன்வளப். பல்கலை. புரிந்துணர்வு ஒப்பந்தம்



அமிர்தா விஸ்வ வித்யா பீடம் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்துடன் அண்மையில் பல்கலை. துணைவேந்தர் ந.பெலிக்ஸ் முன்னிலையில் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்.

**நாகப்பட்டினம், ஜன. 29:** மீன்வளத் துறையில் புதுமையான தொழில்நுட்பங்கள் மற்றும் நிலையான தீர்வுகளின் மூலம் முக்கியமான சவால்களை நிவர்த்தி செய்வதற்காக அமிர்தா விஸ்வ வித்யா பீடம் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகம் அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

மீன்வளப் பல்கலைக்கழக துணைவேந்தர் என். பெலிக்ஸ் முன்னிலையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அலுவலகத்தில் கையொப்பமானது. ஒப்பந்தமானது, செயற்கை நுண்ணறிவு (AI), இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் (IoT) மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வுகளில் அமிர்தாவின் நிபுணத்துவத்தை பல்கலைக்கழகத்தின் மீன்வள அறிவியல் துறையுடன் ஒருங்கிணைக்கிறது.

மீன்வள மதிப்புச் சங்கிலி முழுவதும் செயல்திறன் மற்றும் மீள்தன்மையை மேம்படுத்த மீன் இருப்புகளை நிகழ்நேர கண்காணித்தல், உகந்த மீன்வளர்ப்பு செயல்பாடுகள், கழிவு குறைப்பு மற்றும் நிலையான கழிவு சுத்திகரிப்பு தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் இந்த கூட்டாண்மை முக்கிய கவனம் செலுத்துகிறது.

அமிர்தா குழுவில், கல்வித் துறை,தொழில்துறை கூட்டாண்மைக்கான இயக்குநர் தஆர். ரவி சங்கர் (ஓய்வு), தலைவர் கே. வெங்கட சுப்பிரமணியன் மற்றும் உதவிப் பேராசிரியர்

சி. கணேஷ்குமார், ஆராய்ச்சி இயக்குநர் செரில் ஆண்டனி மற்றும் மீன்வள கல்லூரி ஆராய்ச்சி நிறுவனம் (பொன்னேரி) முதல்வர் ஜெயா ஷகிலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.